**கவனிக்க .**- *2014.09.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1883 - 2014 ඔක්තෝබර් මස 03 වැනි සිකුරාදා - 2014.10.03

*1883 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1096 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1103 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- சந்திரகுமார் சமூக மேம்பாட்டு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2014, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல்

### திவுலபிட்டிய பிரதேச சபை

திவுலபிட்டிய பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு உரிய தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப் பெயர் | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவும் தரமும் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. சாரதி II ஆ வகுப்பு | 2 | பீஎல்- 3- 2006 ஏ 06/2006 (iv) ரூபா 12,470-10X130-10X145-10X160-12X170-ரூபா 18,860 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல். (ஒரு முறையில் ஆகக் குறைந்தது 5 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.) | 1. மொத்த நிறை 24 தொன்னுக்குக் குறைந்த ஸ்டேசன் வெகன் செலுத்துதல் சம்பந்தமாக அல்லது அதற்குக் கூடுதலான நிறையுள்ள மோட்டார் வாகனம் ஓட்டுதல் சம்பந்தமாக மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சான்றுப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. வாகனச் சாரதியாக 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)<br>3. வீதி சட்ட விதிக்கோவை பற்றிய அறிவு இருத்தல் வேண்டும்.<br>4. ஆகக்குறைந்த உயரம் 5 அடி இருத்தல் வேண்டும். |
| 2. காவற்காரர் (அலுவலக ஊழியர் சேவை II ) | 1 | பீஎல்- 1- 2006 ஏ ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | |
| 3. நூலக ஊழியர் (அலுவலக ஊழியர் சேவை III ) | 1 | பீஎல்- 1- 2006 ஏ ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் | |
| 4. வீதி ஊழியர் (அலுவலக ஊழியர் சேவை III ) | 3 | பீஎல்- 1- 2006 ஏ ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 | 5 ஆம் தரம்/6 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் | |
| 5. சுகாதார ஊழியர் | 3 | பீஎல்- 1- 2006 ஏ ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 | கல்வித் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. | |

**பொது தகைமைகள் :-**

1. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது உள்ளூராட்சி அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது.)

2. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3. சிறந்த நடத்தையும் நல்ல தேக ஆரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்மித்த 3 ஆண்டு காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவு இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :-**

* கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் ஆட்சேர்ப்புகள் செய்யப்படும்.
சாரதி பதவிக்காக திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகன பரிசோதகர் ஒருவர் மற்றும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அலுவலர் ஒருவரையும் கொண்ட சபையொன்றின் மூலம் நடாத்தப்படும் வாகனம் செலுத்தும் நிபுணத்துவத்தை அளவிடும் பரீட்சையொன்றில் சித்தி பெறுதல் வேண்டும்.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-**

1. இந்தப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டதாகும். விதவை/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

2. நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

3. இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், மேல் மாகாண சபை அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் ஏனை நிபந்தனைகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்துடைய கட்டளைச் சட்டங்களுக்கும் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கும் திவுலபிட்டிய பிரதேச சபையினால் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை.-** விண்ணப்பதாரர்கள் இங்கு காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு "செயலாளர், திவுலபிட்டிய பிரதேச சபை, தூனகஹ" எனும் முகவரிக்கு 2014.10.20 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் ஆரம்ப தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் ஆவணங்களின் துணைப் பிரதிகள் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. அடையாள அட்டையின் பிரதியொன்று;
4. கிராம சேவை அலுவலரின் சான்றிதழ் ;
5. விண்ணப்பிக்கும் பதவிகளுக்கு உரித்துடைய கலை நிபுணத்துவம்/தேர்ச்சிச் சான்றிதழ் ;
6. இரண்டு நற்சாட்சிப்பத்திரங்கள் (அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்டவை).

எச். எச். ஏ. டி. இந்திக அனுருத்த,
தலைவர்,
திவுலபிட்டிய பிரதேச சபை.

திவுலபிட்டிய பிரதேச சபை பிரதான அலுவலகம்,
தூனகஹ,
2014, செத்தெம்பர் 17.

**மேல் மாகாண அரசாங்க சேவையில் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2014**

திவுலபிட்டிய பிரதேச சபை

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் :----.
4. பிறந்த திகதி :----. ஆண்டு :---- மாதம் :----. திகதி :----.
5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வயது :----.
   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
6. பால் (ஆண் /பெண்) :----.
7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
8. இலங்கைப் பிரசையானது பிறப்பினாலா அல்லது பதிவு செய்யப்பட்டதன் மூலமா? :----.
9. கல்வித் தகைமைகள் :----.
   ஆண்டு :----, சுட்டிலக்கம் :----.
10. ஏனைய தகைமைகள் :----.
11. தொழில் தகைமைகள் :----.
12. சேவை அனுபவம் :----.
13. தொலை பேசி இலக்கம் :----.

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் விசுவாசத்தின் பிரகாரம் உண்மையானதும் சரியானதும் என வெளிப்படுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஆட்சேர்ப்புக்கு முன்னதாக அல்லது பின்னர் தெரிய வந்தால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாமல் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./ திருமதி/ செல்வி ........................................................ தற்போது இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................................. ஆகச் சேவையாற்றுகின்றார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனையொன்றுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்ததாக) உட்படவில்லை என இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

------,
திணைக்கள/ நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

10-258

**பியகம பிரதேச சபை**

பியகம பிரதேச சபையின் கீழ் குறிப்பிட்ட வெற்றிடமாகியுள்ள அலுவலக ஊழியர் சேவையின் III மற்றும் II ஆவது தரத்தில் உள்ள வெற்றிடங்கள் மற்றும் பகுதியளவிலான தொழில் திறன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்துகொள்வதற்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

திறந்த ஆட்சேர்ப்பு

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|
| துறைசார் தொழிலாளர் III ஆம் வகுப்பு | 01 | அ. நி. சு. 6/2006 (IV) இற்கு ஏற்ப MN 1-2006 A ரூ. 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 (IV ஆம் சம்பளமட்டத்தினை எட்டுவதற்கு முன்னர் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை உண்டு.) | (அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (6) கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்.<br><br>கல்விப் பொது சான்றிதழ் (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்திலேனும் (1) (பொது சாதாரண பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.<br><br>**உடல் தகைமைகள்**<br>பதவி கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.<br><br>**வேறு**<br>(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.<br><br>(ii) விண்ணப்பம் கோரப்படும் தினத்தில் அண்மைய மூன்று வருடங்களில் (3) தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவில் இருந்திருத்தல் வேண்டும்.<br><br>(iii) சிறந்த நற்சான்றிதழினைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>**வயது குறைந்த எல்லை**<br><br>விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தின் போது 18 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும். உச்சவயதெல்லை 30 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். |

**எழுத்துமூலப் பரீட்சை**

| *பாடங்கள்* | *காலம்* | *உச்சபுள்ளி அளவு* | *பெறவேண்டிய புள்ளி அளவு* |
|---|---|---|---|
| நுண்மதி மற்றும் உளச்சார்புப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| சமகால நிகழ்வுகள் பற்றிய பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

**குறிப்பு**.- புள்ளிகளைப் பெறும் தொடர் ஒழுங்கின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளிலிருந்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**நேர்முகப் பரீட்சை**.- இங்கு புள்ளி வழங்கப்படமாட்டாது. அடிப்படைத் தகைமைகளை பரீட்சிப்பதற்கு மாத்திரம் நடாத்தப்படுகின்றது.

| *பதவிப் பெயர்* | *பதவிகளின் எண்ணிக்கை* | *சம்பள அளவுத்திட்டம்* | *கல்வி மற்றும் வேறு தகைமைகள்* |
|---|---|---|---|
| அலுவலக சிற்றூழியர் சேவையின் (நூல் நிலைய உதவியாளர்) II ஆம் தரம் | 01 | உ. அ. அ. 6/2006 (IV) இற்கு ஏற்ப PL 1-2006 A ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (வினைத்திறன் தடைப்பரீட்சை 7 ஆவது சம்பள அதிகரிப்புக்கு முன்னர்) | (க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |

**ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை**.- மேற்படி பதவிகள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் ஊடக ஆரம்ப தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

| *பதவிப் பெயர்* | *பதவிகளின் எண்ணிக்கை* | *சம்பள அளவுத்திட்டம்* | *கல்வி மற்றும் வேறு தகைமைகள்* |
|---|---|---|---|
| சாரதி II ஆ | 01 | அ. நி. சு. 6/2006 (IV) இற்கு ஏற்ப PL 3-2006 A ரூ. 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860 (IV ஆம் சம்பள அளவுத்திட்டத்தினை எட்டுவதற்கு முன்னர் வினைத்திறன் தடைப் பரீட்சை உண்டு.) | (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 2 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சாதாரண சித்திகளை பெற்றிருத்தல்.<br>(ஆ) தனியார்/வாடகை வாகனம் மற்றும் மொத்த நிறை 24 அந்தர்களுக்குக் குறைந்த ஸ்டேசன் வெகன் வாகனத்தினை செலுத்துதல் தொடர்பாக மோட்டார் வாகன ஆணையாளரினால் வெளியிடப்பட்ட திறமை பற்றிய சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(இ) திணைக்களத்தின் ஒரு பிரதிநிதி மோட்டார் வாகன திணைக்களத்தின் மோட்டார் பரீட்சகர் மற்றும் பொலிஸ் வாகனப் பிரிவின் அலுவலர் ஒருவரை உள்ளடக்கிய சபையினால் நடாத்தப்படுகின்ற வாகனம் செலுத்தும் திறமையினை மதிப்பீடு செய்யும் பரீட்சையினையும் உள்ளடக்குதல் வேண்டும்.<br>(ஈ) ஆகக் குறைந்த உயரம் 5 அடியாக இருத்தல் வேண்டும். |

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|
| | | | (உ) வாகன சாரதியொருவராக 3 வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)<br>(ஊ) பகல் நேரங்களில் மற்றும் இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடும் பொருட்டு உடல் ரீதியாக பொருத்தமான தகைமையினைக் கெண்டிருக்க வேண்டியதுடன் சிறந்த கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.<br>(எ) பெருந்தெரு சட்டக்கோவை பற்றிய சிறந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். |

**ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை.-**

(i) திணைக்களத்தின் ஒரு பிரதிநிதி மோட்டார் வாகன திணைக்களத்தின் மோட்டார் வாகன பரீட்சகர் ஒருவர் மற்றும் பொலிஸ் வாகன போக்குவரத்துப் பிரிவின் அலுவலர் ஒருவரையும் உள்ளடக்கிய சபையினால் நடாத்தப்பட்ட வாகனம் செலுத்தும் நிபுணத்துவத்தை அளக்கும் பரீட்சிப்பினையும் உள்ளடக்குதல் வேண்டும்.

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|
| அலுவலக சிற்றூழியர் சேவையின் (பணி/துறைசார் தொழிலாளர்/ வீதித் தொழிலாளர்) III | 01 | அ. நி. சு. 6/2006 (IV) இற்கு ஏற்ப PL 1-2006 A ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (IV ஆம் சம்பள மட்டத்தினை எட்டுவதற்கு முன்னர் வினைத்திறன் தடைப்பரீட்சை உண்டு) | ஆகக் குறைந்தது 5 ஆம் தரத்தில்/6 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை.-** மேலே குறிப்பிட்டுள்ள பதவி தொடர்பாக நேர்முகப் பரீட்சைச் சபையினால் ஆரம்ப தகைமையினை பரீட்சிப்புச் செய்த பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

02. **பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கையராக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமாகும் போது கடைசி 3 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவில் இருப்பவராக இருத்தல் வேண்டும் ;
(iii) சிறந்த நற்சான்றிதழ் உடையவராகவும், சிறந்த உடற் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும் ;
(iv) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் 18 வயதிற்கு குறையாமல் இருப்பதோடு 45 வயதினைவிட அதிகமாகவும் இருத்தல் கூடாது;
(v) எனினும் தற்பொழுத (அரச/மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர ஊழியர்கள் தொடர்பாக இந்த உச்ச வயதெல்லை செயல்வலுப் பெறாது) ;
(vi) தண்டனைச் சட்டக் கோவைக்கு கட்டுப்பட்டு நீதிமன்றமொன்றில் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.

03. நிரந்தர ஊழியர்கள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை அரச நிருவாக சுற்றறிக்கை 24/95 இன் நிபந்தனைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

04. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்த பதவிகள் நிரந்தரமானது. ஓய்வூதிய சம்பளத்துடன் கூடியது. விதவைகள்/அநாதைகள்/தபுதாரரர் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

(ii) ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஊழியர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் பதவி உயர்வு செய்யப்படுகின்ற ஊழியர்கள் ஒருவருட தகுதிகாண் கால எல்லைக்கு உட்பட்டதாகும்.

(iii) இந்த ஆட்சேர்ப்புச் செய்யும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும் மேல் மாகாண சபையின் நிதிப் பிரமாணங்களுக்கும், கௌரவ ஆளுநரின் கட்டளைகளுக்கும், மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற வேறு நிபந்தனைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் உள்ளூராட்சிமன்றத்தினால் காலத்திற்குக் காலம் வெளியீடு செய்யப்படுகின்ற நிபந்தனைகளுக்கு இணைவாக செயற்படுவதற்கு உடன்படுதல் வேண்டும்.

5. **விண்ணப்பம் செய்யவேண்டிய விதம்**.- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு இணைவாக 12 × 8 அளவிலான காகிதத்தில் தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கையேற்கும் தினம் 2014 ....... ஆந் திகதிக்கு முன்னர் செயலாளர், பியகம பிரதேச சபை தெல்கொட என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை இடும் கடித உறையின் இடது புற மேல் மூலையில் "விண்ணப்பிக்கின்ற பதவி தொடர்பாக விண்ணப்பப்படிவம்" என்று குறிப்பிடுதல் வேண்டும். (தற்பொழுது அரச/ மாகாண அரச சேவையின் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்கள் தாம் சேவை பிரதானியின் ஊடாக அனுப்புதல் வேண்டும்) உரிய தினம் தாண்டிக் கிடைக்கப் பெறும் விண்ணப்பப் படிவங்கள் மறுதலிக்கப்படும்.

6. விண்ணப்பப்படிவத்துடன் கீழ் உள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவேண்டியதுடன் மூலப்பிரதியினை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) வதிவினை உறுதிப்படுத்தும் வகையில் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம சேவையாளரின் சான்றிதழ் (பிரதேச செயலாளர் குறுங் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும்) ;
(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் ;
(v) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;
(vi) ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்தல் அல்லது காலம் தாழ்த்துதல் அல்லது இரத்துச் செய்தல் போன்ற சகல அதிகாரம் பியகம பிரதேச சபையின் செயலாளருக்கு உரியதாகும்.

ரமணி குலவர்தன,
செயலாளர்,
பியகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பியகம,
2014, செத்தெம்பர் 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பியகம பிரதேச சபை**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :----.
2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.
3. தபால் முகவரி :----.
4. தொலைபேசி இல. :----.
5. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை இல. :----.
7. 2014 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. ஆண்/பெண் தன்மை :----.
9. திருமணம் செய்தவரா?/திருமணம் செய்யாதவரா? :----.
10. இனம் :----.
11. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாக? பதிவு செய்தமையினாலேயா? என்பது பற்றி :----.
12. கல்வித் தகைமைகள் :----.
13. அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள் :----.
14. நீங்கள் தற்பொழுது பியகம பிரதேச சபையில் சேவையாற்றுபவராயின் :----.
(i) தற்பொழுது வகிக்கும் பதவி :----.
(ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(iii) அந்த நியமனத்தின் தன்மை (நிலையானது/அனியம்/தற்காலிகம்/தெரிவு/ஒப்பந்த/செயற்திட்ட அடிப்படையின் படி) :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் மற்றும் சரியானதும் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பிழையானது அல்லது தவறானது என்று இந்தப் பதவிக்கு தெரிவு செய்து கொள்வதற்கு முன்னர் தெரியவந்தால் நான் பொருத்தமற்றவர் என்றும் நியமனம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதுபோன்ற விடயமொன்று நிரூபிக்கப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாது சேவையிலிருந்து பதவி நீக்குவதற்கும் உட்படுவேன் என்றும் அறிவேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

10-260

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பேருவளை பிரதேச சபை - அளுத்கம

வீதிகளின் பெயர் மாற்றம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் இப்பிரதேச சபையின் மாலவன்பத்த உப அலுவலக பிரிவுக்குட்பட்ட முல்லபிடிய விகாரைக்கு அண்மையில் கடொலான வரையிலான பாதை, ''ரணவிரு வலிமுணி மயுர நாலக த சில்வா மாவத்தை'' என பெயர் மாற்றம் பெறுவதற்கு இப்பிரதேச சபையில் 2013.05.21 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில் இல. 8 : 11 பிரிவு பிரேரணைப்படி மேல் மாகாண சபையின் மாகாண நிர்வாக விடய கௌரவ அமைச்சரவர்களின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2014.07.15 ஆந் திகதி முதல் இப்பாதையானது ''ரணவிரு வலிமுணி மயுர நாலக த சில்வா மாவத்தை'' என அழைக்கப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

எஸ். எச். குஸ்மன் த சில்வா,
தலைவர்,
பேருவளை பிரதேச சபை.

பேருவளை பிரதேச சபை அலுவலகம்,
அளுத்கம,
2014, யூலை 31.

10-145

---

## மாத்தறை மாநகர சபை

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2015 ஆம் ஆண்டிற்கான உறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (06) ஆம் பிரிவின் ''ஆ'' அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.

இந்த சங்கங்களுக்கு அருகாமையிலோ குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலோ வதியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுந்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.

மாநகர சபை ஆணையாளர்,
மாநகர சபை,
மாத்தறை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2014, செத்தெம்பர் 16.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | சங்கத்தலைவர் முகாமையாளர் செயலாளர் | சங்கத்தின் பெயர் | சங்கம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. லலித் சிறிவர்தன | செயலாளர் | ஜனதா விளையாட்டு சங்கம் | இல. 50, குமாரதுங்க வீதி, மாத்தறை |
| 2. யூ. ஏ. லயனல் | செயலாளர் | பெரகும் விளையாட்டு சங்கம் | இல. 71, ராஹூல வீதி, மாத்தறை |
| 3. எம். பீ. ஹர்பி | தலைவர் | நில்வலா விளையாட்டு சங்கம் | 392, புதிய தங்கல்ல வீதி, பல்லிமுல்ல, மாத்தறை |
| 4. விக்கிரமசிங்க கால்லகே துசித்த | செயலாளர் | பிரின்ஸ் விளையாட்டு சங்கம் | இல. 103, அக்குரஸ்ஸ வீதி, மாத்தறை |
| 5. கே. எஸ். பசில் | செயலாளர் | ஓஅசியஸ் விளையாட்டு சங்கம் | இல. 76, ராஹூல வீதி, மாத்தறை |

10-199

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2014 |
| | | வெள்ளி | 10.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2014 |
| | | வெள்ளி | 17.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2014 |
| | | வெள்ளி | 24.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2014 |
| | | வெள்ளி | 31.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2014 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2014 |
| | | வெள்ளி | 14.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2014 |
| | | வெள்ளி | 21.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2014 |
| | | வெள்ளி | 28.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2014 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 05.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2014 |
| | | வெள்ளி | 12.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2014 |
| | | வெள்ளி | 19.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.12.2014 |
| | | வெள்ளி | 26.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2014 |

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.